## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

### சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு I (இணையம் மூலமானது)– 2019 (மீள் தேர்வு)

### உரோமானியச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

எவையேனும் **மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. (i) மற்றும் (ii) பகுதிகள் **இரண்டிற்கும்** விடையளிக்க.

   i) வறுமையின் காரணமாக, லீனா மற்றும் பல்புஸ் ஆகியோர் அவர்களது புதிதாகப் பிறந்த பிள்ளையை, நிலையான மீட்சிக்கான உரிமைக்கு அமைவாக அடிமைத்துவத்தினுள் விற்பனை செய்யத் தீர்மானித்தனர். புருட்டஸ் என்பவன் அப் பிள்ளையைக் கொள்வனவு செய்ததுடன் அவளுக்கு நோரா எனப் பெயருமிட்டான். இருபது வயதில் நோரா ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். நோராவினுடைய கர்ப்ப காலத்தின் போது புருட்டஸினுடைய இறுதி விருப்பாவணத்தின் மூலம் அவளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதாக பின்னர் வெளிப்படுத்தப்பட்டது. நோராவினுடைய மகன் டைட்டியஸ் தனது சட்ட நிலையினைப் பற்றி அறிய விரும்புகிறான்.

   டைட்டியஸிற்கு ஆலோசனை வழங்குக.

   ii) மார்சிலஸ் என்பவன் உரோமில் வசித்த செல்வந்த வணிகன் ஒருவன் ஆவான். குதிரை ஒன்றிலிருந்து கீழே விழுந்ததன் காரணமாக மார்சிலஸ் கடுமையாகக் காயமடைந்திருந்த போது, அவனுடைய அடிமைகளில் ஒருவனான பல்பஸ் என்பவன் அவனைக் கவனித்து வந்தான். பல்பஸிற்கு சுதந்திரம் வழங்க மார்சிலஸ் விரும்புகிறான். மார்சிலஸிற்கு ஆலோசனை வழங்குக.

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளில் ஒகஸ்டஸ் என்பவனுக்குக் காணப்படும் சொத்துரிமைகள் தொடர்பில் காரணங்களைத் தருவதன் மூலம், அவனுக்கு ஆலோசனை வழங்குக.

   i) தனது காணியில் போதுமான இடம் இல்லாமையால், ஒகஸ்டஸ் தனது சொந்தப் பொருட்களைப் பயன்படுத்தி தனது அயலவரின் காணியில் களஞ்சியசாலை ஒன்றைக் கட்டுவதற்குத் தீர்மானித்தான்.

ii) தனது கிராமத்தின் எல்லையில் ஒகஸ்டஸ் வண்டி ஒன்றைக் கண்டான். அவன் அதன உரிமையாளனைத் தேடிய போதிலும், அவ் வண்டியானது உரிமையாளனால் கைவிடப்பட்டது என்பதைப் பின்னர் அறிந்து கொண்டான். ஒகஸ்டஸ் அவ் வண்டியைக் கைப்பற்ற விரும்பினான்.

iii) மார்கஸ் என்பவன் உரோமில பிரபலமான காதல் கவிதைகளெழுதும் கவிஞன ஒருவனாக இருந்தான். ஒரு நாள் மார்கஸ் ஒகஸ்டஸினைச் சந்தித்த போது ஒகஸ்டஸினுடைய அழகான மகளைப் பார்த்ததுடன் ஒகஸ்டஸினுடைய காகிதத்தில அவளுக்காக கவிதையொன்றினையும் எழுதினான்.

iv) போலுஸ் என்பவன் ஓர் திறமையான தச்சன் என்பதுடன் அவன் ஒகஸ்டஸினுடைய மரத்திலிருந்து மேசை ஒன்றை உருவாக்கினான். ஒகஸ்டஸ் அம் மேசையைச் சொந்தம் கொள்ள விரும்பினான்.

3. உரோமானிய சொந்தமானது பொருளொன்றிலுள்ள இறுதியான எஞ்சிய உரிமை என சில காரணங்களுக்காக. வரைவிலக்கணப் படுத்தப் பட்டுள்ளது; எல்லா நேரங்களிலும் உரிமையாளர் ஒருவர் சொந்தத்திற்கான எல்லையற்ற உரிமைகளை அனுபவிப்பதில்லை. ஓர் பயனுகர் சேவகம், நீள்காலக் குத்தகை மற்றும் கட்டிடம் சம்மந்தமான குத்தகை என்பவற்றின் உரிமையாளருக்கு ஓர் இறுதியான அனுபவிக்கும் உரிமை என்பதற்கு மேலாக வேறெதுவுமில்லை.

நீர் உடன்படுகிறீரா? ஏனையோரின் காணிகளில் உள்ள உரிமைகள் (*jura in re aliena*) என்பதன் உள்ளமையுடன் தொடர்புறுத்தி மேற்போந்த கூற்றினை ஆராய்க.

4. பின்வரும் சூழ்நிலைகளின் கீழ் திறத்தவர்களுக்கான சட்ட விளைவுகள் மற்றும் உரிமைகள் கடப்பாடுகள் என்பன தொடர்பில் விளக்குக:

i) அல்பேர்டஸ் மற்றும் மாகனஸ் ஆகியோர் சிறு பிராயத்து நண்பர்களாவர். மாகனஸ் வியாபாரமொன்றினை நடாத்திக் கொண்டிருந்தான் என்பதுடன் அவன் நிதி நெருக்கடிகளைச் சந்திக்க நேர்ந்தது. அவன் அல்பேர்டஸிடம் கடன் ஒன்றைக் கேட்டான் எனினும் கடன் வழங்குவதற்கு அல்பேர்டஸிடம் போதுமான பணமிருக்கவில்லை. அல்பேர்டஸ் அவனது அயலவனான ஜூலியன் என்பவனிடம் மாகனஸிற்கு கடன் வழங்குமாறு கேட்டான். ஜூலியன், அல்பேர்டஸினுடைய வார்த்தைகளில் தங்கியிருந்து மாகனஸிற்குக் கடன் வழங்கினான். மாகனஸ் ஜூலியனுக்கு ஆறு மாதங்களுக்குள்

பணத்தைச் திருப்பிச் செலுத்துவான் என உடன்படப்பட்டது. மாகனஸ் உடன்பட்டவாறாக கடனைச் செலுத்தத் தவறினான்.

ii) பற்றியன் என்பவன் ஓர் சோள விவசாயி என்பதுடன் விடுஸ் என்பவன் அவனது வழக்கமான கொள்வனவாளர்களில் ஒருவனாவான். பற்றியன் தனது ஐந்து ஏக்கர் சோளப் புலத்தினை விடுஸிற்குக் காட்டியதுடன் இருநூறு இறாத்தல் சோளத்தினை இரண்டு மாதங்களில் உடன்பட்டதான விலையொன்றுக்கு அவனுக்கு ஒப்படைப்பதற்காக உடன்பட்டும் கொண்டான். பதிலுக்கு, இரண்டு மாதங்களில் பற்றியனிடமிருந்து அவன் பெறப்போகின்ற இருநூறு இறாத்தல் சோளத்தினை டுலியன் என்பவனுக்கு விற்பனை செய்வதற்கு விடுஸ் உடன்பட்டுக் கொண்டான். வெள்ளத்தின் காரணமாக பற்றியனின் சோளப் புலம் அழிவடைந்ததுடன் அவன் உடன்பட்ட பொருட்களை விடுஸிற்கு ஒப்படைக்கவும் தவறினான்.

டுலியன் விடுஸிடமிருந்து ஒப்படைப்பைக் கோரினான்.

5. பின்வரும் சூழ்நிலைகளின் கீழ் பொருத்தமான திறத்தவர்களின் கடப்பாடுகள் தொடர்பில் ஆராய்க:

i) கேட்டோ என்பவன் அட்டிகஸ் என்பவனுடைய கழுதையினை ஓர் நாள் சவாரிக்காக இரவலாகப் பெற்றான். அதன் பின்னர் அவன் அக் கழுதையினை அருகிலுள்ள களியாட்டம் ஒன்றுக்கு எடுத்துச் சென்றதுடன் கட்டணத்திற்காகக் கழுதை சவாரிகளையும் வழங்கினான். களியாட்டத்தின் முடிவில் கேட்டோ அக் கழுதையினை சைரஸ் என்பவனுக்கு விற்றான்.

ii) கேட்டோ என்பவன் அட்டிகஸ் என்பவனுடைய தங்கத்தினாலான தலையணி மற்றும் ஊதா நிறப் பட்டாடை என்பவற்றை விருந்தொன்றுக்கு அணிவதற்காக இரவலாகப் பெற்றான். டுலலியஸ் என்பவனால் தலைமை தாங்கப்பட்ட கொள்ளையர்கள் குழுவொன்று கேட்டோவினை வழி மறித்துத் தாக்கி பொல்லுகளால் அவனைக் கடுமையாக அடித்ததுடன் தங்கத்திலான அத் தலையணியையும் திருடினர். அத் தாக்குதலில் தங்கத்திலான தலையணி வளைந்ததுடன் ஊதாப் பட்டாடை கிழிந்தது.

iii) கேட்டோவினுடைய தோட்டத்திலிருந்த ஓர் பாரிய மரம் சந்தைப் பிரதேசத்தின் மேலே படர்ந்து காணப்பட்டது. அட்டிகஸின் அடிமை, "வாருங்கள் எனது சுவையான கேக்குகளை வாங்குங்கள்" என அவனது பொருட்களை விற்பனைக்காகக் கூவிக்கொண்டு கீழே கடந்து சென்ற போது கேட்டோ அம் மரத்தின் பெரிய கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தான். கிளையொன்று கீழே விழுந்து அடிமையைக் கொன்றது.

கிளை விழுந்தபோது அவன் சத்தமாகக் குரலெழுப்பி எச்சரிக்கை விடுத்ததாக கேட்டோ வாதிட்டான்.

6. i) லினியஸ் எனும் பிள்ளையினடைய விவகாரங்களை முகாமைத்துவம் செய்துவந்த கசியஸ் என்பவன் அவனுடைய தந்தை கேட்டோ என்பவனின் இறுதி விருப்பாவணத்தின் கீழ் அவனுக்கென எதுவுமே கிடைத்திருக்காத போதிலும் அப் பிள்ளைக்கு வழங்கப்பட்ட ஆணைக்கொடை ஒன்றினை ஏற்றுக் கொண்டான்.

கசியஸிற்கு ஆலோசனை வழங்குக.

ii) கேட்டோ என்பவன் அவனது அதிகாரத்தினுள் காணப்பட்ட அவனுடைய மகன் சைரஸ் மற்றும் அவனுடைய அடிமை யூலியஸ் ஆகியோரைத் தனது சொத்திற்கு வாரிசுகளாக நியமித்திருந்தான் என்பதுடன் ஏதேனும் பதில் நியமனத்தினை மேற்கொள்ளத் தவறினான். கேட்டோவினுடைய இறப்பிற்கு முன்னர் யூலியஸ் இறந்தான் என்பதுடன் சைரஸ் சொத்தினை ஏற்க விரும்பவில்லை.

இச் சூழ்நிலையில் சொத்துறுதியற்ற நிலை உருவாகுமா என ஆராய்க.

iii) கேட்டோ என்பவன் தனது சொத்தினை அவனால் வாரிசாக நியமிக்கப்பட்ட கசியஸ் என்பவனுக்கு, கசியஸினுடைய இறப்பின் மீது, அதே சொத்தினை லினியஸ் என்பவனுக்கு விட்டுச் செல்ல வேண்டும் என்ற ஓர் வேண்டுகோளுடன் விட்டுச்செல்ல விரும்புகிறான். அதேபோல் லினியஸினுடைய இறப்பின் மீது அதே சொத்தினை சைரஸ் என்பவனுக்கு விட்டுச் செல்லும்படி லினியஸ் வேண்டப்பட்டான்.

கேட்டோவிற்கு ஆலோசனை வழங்குக.

***********